**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.STC.157/2018
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : திக்விஜயன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of December 2023.

04.12.2023

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது முதுகுளத்தூர் துணைஅஞ்சலஅதிகாரியாக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணைக்கு இணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புதசாஆ.4 ஆவணம் எங்களது அலுவலகத்திலிருந்து 27.12.2017 ம் தேதி கொடுக்கப்பட்ட கடிதம் தான். பதிவு தபால் பதிவு செய்யப்பட்டது 06.12.2017. 07.12.2017 ம் தேதி சார்பு செய்யப்பட்டது. பதிவு தபாலுக்கு கொடுக்கப்பட்ட எண். RT648140476IN ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 06.12.2017 ம் தேதி எங்களது அஞ்சல் அலுவலகத்தில் நிறையபதிவு தபால்கள் பதிவு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் புதசா.ஆ.4 ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் அலுவலகத்திலிருந்து எந்தவிதமான ஆவணங்களும் தற்போது என்னுடன் எடுத்துவரவில்லை என்றால் சரிதான். பதிவு தபாலுக்கு கொடுக்கப்பட்ட எண். RT648140476IN–ல் எங்கிருந்து எந்த முகவரிக்கு எந்த நபருக்கு அனுப்பப்பட்டது என்று இல்லை என்றால் சரிதான். முதுகுளத்தூர் தபால் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு இளையாங்குடிக்கு சென்றுள்ளது என்றால் சரிதான்.

2) இளையான்குடியில் சுமார் 2,000 வீடுகள் இருக்கலாம். அறிவிப்பு அனுப்பும்போது அஞ்சல் ஒப்புகை அட்டை எப்பொழுதும் சரியாக கொடுக்கப்படும் என்றால் இல்லை. பொதுவாக ஒப்புகை அட்டை ஏன் திரும்பவரவில்லை என்று நாங்கள் கேட்டு அறிக்கையை பெற்று வைத்துக்கொள்வோம். ஒப்புகை அட்டை வரவில்லை என்றால் உயர்அதிகாரி நடவடிக்கை எடுப்பார்.